ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

நவம்பர் *2016*

வேணு *22;* கானம் *4*

மஹாரண்யம்
ஸ்ரீ ஸ்ரீ முரளீதர
ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன் வெளிவரும்
தெய்வீக மாதப் பத்திரிகை

தனி பிரதி *Rs 15/-*
ஆண்டு சந்தா *Rs 180/-*



NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME

Delivered by India Post
www.indiapost.gov.in

ஸ்ரீ ப்ரேமிக ஸ்ரீனிவாச பெருமாள் ப்ரதிஷ்டா தினம்,
ப்ரேமிக பவனம், சென்னை, 11 Oct 2016





<u>முன் அட்டை:</u>
சென்னை, கே கே நகர், அருள்மிகு
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலில்
ஸ்ரீமத் ராமாயணம் உபந்யாசம்
<u>பின் அட்டை:</u>
அமர் சேவா சங்கம், ஆய்க்குடி

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# மதுரமுரளி

வேணு 22 | கானம் 4

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 5 | மதுரமான மஹனீயர்-248 |
| 7 | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் |
| 9 | ஸ்புடம் போட்ட தங்கம் |
| 14 | கச்சியில் கருட சேவை |
| 17 | பாலகர்களுக்கு ஒரு கதை |
| 28 | அஸ[illegible]பதி |
| 30 | தன்னம்பிக்கை வளர்த்தல் |
| 33 | பாரம்பரிய பொக்கிஷங்கள் |
| 36 | சைதன்ய மஹாப்ரபு |
| 38 | புராநவா |
| 39 | சனாதன புதிர் |
| 40 | படித்ததில் பிடித்தது |





12 அமரரும் போற்றும் அமர் சேவா சங்கம்

# மதுரகீதம்

## ஜய ஜய ஸ்ரீ ராம பாதுகே

ராகம்: நாட்டை
தாளம்: ஆதி

ஜய ஜய ஸ்ரீ ராமபாதுகே
ஜய ஜய ஹேமபூஷிதே
ஜய ஜய நந்திக்ராமஸ்திதே
ஜய ஜய ஆர்யபரதஸேவிதே
ஜய விஜயீபவ ஸ்ரீபாதுகே

ஜய ஜய கோமளாலங்காரயுதே
ஜய ஜய காமிதவரப்ரதே
ஜய ஜய ரமாவாணீநுதே
ஜய ஜய ஸாமகானப்ரியே
ஜய விஜயீபவ ஸ்ரீபாதுகே

ஜய ஜய சத்ர சாமரஸஹிதே
ஜய ஜய பத்ர குஸுமஸமர்ச்சிதே
ஜய ஜய ரத்ன ஸிம்ஹாஸன ராஜிதே
ஜய ஜய தர்ம சாஸன சதுரே
ஜய விஜயீபவ ஸ்ரீ பாதுகே

ஜய ஜய சோக வினாசகரே
ஜய ஜய லோக ரக்ஷணபரே
ஜய ஜய கைவல்யானந்தப்ரதே
ஜய ஜய கிசோர முரளீதர வினுதே
ஜய விஜயீபவ ஸ்ரீ பாதுகே

# மதுரமான மஹனீயர்

டாக்டர் ஆ பாக்யநாதன்

நமது சத்சங்கத்தைச் சேர்ந்த தஞ்சை ஸ்ரீமதி சாவித்ரி ராமகிருஷ்ணன், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் மிகுந்த பக்தியுடன், தஞ்சையில் மிக சிறப்பாக நாம பிரச்சார கைங்கர்யம் செய்து வருபவர். அவருடைய புதல்வரின் திருமணம் கடந்த அக்டோபர் 18ஆம் தேதி தஞ்சையில் நடைபெற்றது. மேலும், சேங்கனூரில் ரோகிணி உற்சவமும் அக்டோபர் 18ஆம் தேதி வந்ததால், காலையில் சேங்கனூரில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் பாதுகை புறப்பாட்டில் கலந்துகொண்டு விட்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மாலையில் ஸ்ரீமதி சாவித்ரி ராமகிருஷ்ணன் வீட்டு திருமணத்திற்கு சென்று ஆசீர்வதித்தார்கள்.

பின்பு தஞ்சை SBI காலனியில் உள்ள பிள்ளையார் கோவிலில் ஒரு சத்சங்கம் செய்தார்கள். தற்பொழுது தஞ்சையில் உள்ள ஸ்ரீ நவநீத க்ருஷ்ணன் கோவிலில் புனருத்தாரண கைங்கர்யம் நடைபெற்று வருகின்றது. மாலையில் ஸ்ரீ நவநீத க்ருஷ்ணனை தரிசனம் செய்யும் ஆவலில், ஸ்ரீ ஸ்வாமிஜி கோயிலுக்கு சென்றார்கள். செல்லும் வழியில் எல்லாம் நவநீதக்ருஷ்ணன் பற்றிய ஸ்மரணையிலேயே இருந்தார்கள்.

“இந்த நவநீதக்ருஷ்ணன் கோயிலில்தானே ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் முதன்முதலில் ஒலிபெருக்கியில் பிரவசனம் செய்தார்கள். மேலும், ஸ்ரீ பக்த கோலாஹலனின் முதல் ப்ரும்மோற்சவமும் இங்குதானே நடைபெற்றது. ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் முதன் முதலில் பிரவசனம் செய்தார் என்ற காரணத்தினால், சில வருடங்களுக்கு முன்பு, இந்த கோவிலில்தான் “கீதாமண்டபம்” திருப்பணி கைங்கரிய பாக்யம் கிடைத்தது” இப்படியாக பலவிதமாக ஸ்ரீ நவநீதக்ருஷ்ணனைப் பற்றிய எண்ண அலைகளுடனே, தரிசனத்திற்குச் சென்றார் ஸ்ரீ ஸ்வாமிஜி.

அப்பொழுது இத்திருக்கோவிலில் திருப்பணி கைங்கரியம் செய்பவர்கள், இப்பணியை பூர்த்தி செய்ய, மேலும் ரூ5,00,000/- (ஐந்து லக்ஷம்) வரை தேவைப்படுவதாகக் கூறினர். உடனே, தஞ்சையில் சில அன்பர்கள் அன்று சமர்ப்பித்த ரூ30,000/-த்தை திருப்பணிக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி வழங்கினார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் மிகுந்த பக்தி உள்ள தஞ்சை ஸ்ரீ கணபதிசுப்ரமணியன் அவர்களின் குமாரர் திரு. பரத், ஸ்ரீ ஸ்வாமிஜியின் குறிப்பறிந்து ரூ1,00,000/- (ஒரு லக்ஷம்) உடனே திருப்பணிக்கு சமர்ப்பித்தார்கள். மேலும், ஜெர்மனியில் இருந்து வந்த பக்தர் திரு. மணி, ரூ50,000/- (ஐம்பதாயிரம்) திருப்பணிக்கு சமர்ப்பித்தார்கள்.

பின்பு ஸ்ரீ ஸ்வாமிஜி திரும்பி வருகையில், தொடர்ந்து நவநீதக்ருஷ்ணனின் சௌந்தர்யத்தையும், கைங்கரிய பாக்யத்தையும் பேசிக்கொண்டே கோவிந்தபுரம் வந்தடைந்தார்கள்.

அன்று இரவு, ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு ஒரு ஸ்வப்னம் போன்ற திவ்யகாட்சி. அதில், ஸ்ரீ நவநீதக்ருஷ்ணன் ஆவிர்ப்பவித்தான். “நீ எனக்கு அவசியம் திருப்பணி கைங்கரியம் செய்ய வேண்டும். ஏன் என்றால், நீ நாங்கூரில் உள்ள காவளம்பாடி, செம்பொன்செய் கோவில்களை எல்லாம் ஸ்ரீ ஆழ்வார்கள் பாடியுள்ளனர் என்றுதானே திருப்பணி செய்கின்றாய். என்னை ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் பல ஸ்தோத்திரங்களாலும், கீர்த்தனங்களாலும் பாடியுள்ளார்கள். உனக்கு, எப்பொழுதும் எல்லாவற்றையும் விட ஸ்ரீ ஸ்ரீ அண்ணாதானே முக்கியம். எனவே என்னை ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களே பாடியுள்ளதால், நீ எனக்கு திருப்பணி கைங்கரியம் செய்ய வேண்டும்” என்று கூறி மறைந்துவிட்டான்.

ஸ்ரீ ஸ்வாமிஜி இதை மறுநாள் பகிர்ந்துகொண்டார்கள். மிகவும் ரஸமாக இருந்ததால், இதை பகிர்கின்றேன்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

**மஹாகணபதி முன்பு, ‘‘சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரசன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே’’ என்று நாம் சொல்லும் ஸ்லோகம் விஷ்ணுவையும் குறித்து அமைகின்றது என்று சொல்லப்பட்டுள்ளதே? எப்படி?**

விஷ்ணு ‘பீதாம்பரதாரி’ என்பதால் இந்த ஐயம் வரலாம். ஆனால், முதல் யுகமான க்ருதயுகத்தில் கர்த்தமப்ரஜாபதிக்கு தரிசனம் கொடுக்க வந்த பகவானுடைய மாலை, வஸ்திரம், எல்லாம் வெண்மையாக இருந்ததென்று சொல்லப்பட்டு இருக்கின்றது. ‘சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே’ என்ற ஸ்லோகத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது அந்த மஹாவிஷ்ணுவிற்கு பொருந்தும். வெண்மையான ஆடை உடுத்தியவரையும், எங்கும் வியாபித்தவரையும், சந்திரபிம்பம் போல் தேக வர்ணம் உடையவரையும் எல்லா விக்னங்களும் விலகுவதற்கு தியானம் செய்வோம் என்கின்றார். எந்த ஒரு கார்யத்தை ஆரம்பிக்கும்பொழுதும், நான்கு யுகங்களில் முதல் யுகமான க்ருத யுகத்தில் தோன்றிய விஷ்ணு மூர்த்தியின் ஸ்வரூபத்தை தியானம் செய்கின்றோம்.

**ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு ஆசைகள் தடை என்பதோடு மட்டுமல்லாமல், அப்படிப்பட்டோருக்கு புகழ் ஒரு தடை என்கின்றீர்களே! புகழ் நல்ல விஷயம்தானே. புகழே ஆபத்தானது என்று எப்படி சொல்ல முடியும்?**

நிறைய செல்வத்தைக் கொட்டி பகவானுக்கு சேவை செய்வதால் பகவான் மயங்குவதில்லை. தானத்தினாலும் பகவான் மயங்குவதில்லை. அறிவு, உயர்ந்தகுலம் போன்றவைகளைக் கண்டும் பகவான் மயங்குவதில்லை. இவைகளுக்கு எல்லாம் மயங்காத பகவானே ஸ்துதிக்கு மயங்கிவிடுகின்றார். அப்படி என்றால் பிறர் நம்மை புகழும்பொழுது நாம் எவ்வளவு ஜாக்ரதையாக இருக்க வேண்டும் என்பது நமக்கு தெரிய வருகின்றது.

**நீங்கள் சொல்வது என் நன்மைக்குத்தான் என தெரிந்தும் என்னால் அதை பின்பற்ற முடியவில்லை. அதற்கு என்ன காரணம்?**

ஒருவர் சொல்வது நம்முடைய நன்மைக்கு என்று தெரிந்தும் நம்மால் பின்பற்ற முடியவில்லை என்றால், அதற்கு கீழ்க்கண்ட ஏதோ ஒன்றுதான் காரணமாக இருக்க வேண்டும். அலட்சியம், சோம்பேறித்தனம், 'இவர் என்ன சொல்வது நான் என்ன கேட்பது' என்ற அஹங்காரம், வேறு ஒரு விஷயத்தில் பேராசை, சொன்ன விஷயத்தின் அருமையும் Seriousnessஉம் புரியாததாகத்தான் இருக்க வேண்டும்.

# ஸ்புடம் போட்ட தங்கம்

டாக்டர் ஆ பாக்யநாதன்

நவராத்திரியை முன்னிட்டு கே.கே. நகர் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸ்ரீமத் ராமாயண நவாஹம் நடைபெற்றது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து கதை கேட்டு அமைதி பெற்றனர். இந்த பத்து நாட்களும் ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஸ்ரீ மாதுரீ ஸகீ தாயாருடன் ப்ரேமிக பவனத்தில் எழுந்தருளி இருந்தார். காலை 8மணி அளவில் ஊஞ்சலில் ஸ்ரீ ப்ரேமிகவரதனும் மாதுரீஸகியும் எழுந்தருளப்பட்டு ராதிகா சதகம் கீர்த்தனமும் நடைபெற்றது.

அப்பொழுது, ஒருநாள் தற்செயலாக செய்தித்தாளில் இங்கு சிலர் ராமரை எரிப்பதாக செய்தியை படித்து துடிதுடித்துவிட்டார் ஸ்ரீஸ்வாமிஜி. ‘‘நம்மால் ஒன்றும் செய்ய முடியாமல், கையாலாகாமல் இருக்கின்றோமே; நமக்கு போராட்டம், கூட்டம், அரசியல் ஒத்து வராது’’, என்று ராமரையே நினைத்துக் கொண்டு மனதில் அமைதியின்றி தவித்தார்.

“சீதையை அக்னிப்ரவேசம் செய்யச் சொன்ன ராமருக்கு ஒரு குறை இருந்து வந்தது. சீதையை மட்டும் அக்னிப்ரவேசம் செய்து கற்பை நிரூபிக்க சொன்னோமே; நாமும் அக்னிப்ரவேசம் செய்து நம்முடைய ஏகபத்னி விரதத்தை நிரூபித்திருக்க வேண்டும் இல்லையா? என்று நினைத்திருப்பார். பக்தர்களிடம் “அக்னியை மூட்டு; அதற்குள் நான் ப்ரவேசிக்க வேண்டும்” என்றால், யாருக்கும் துணிச்சல் வராது. இவர்கள்தான் அதற்கு சரியான ஆட்கள் என்று ஸ்ரீராமர் நினைத்திருப்பார். அதனால் இவர்கள் மூட்டும் அக்னியில் புகுந்து வந்து, மேலும் ஸ்புடம் போட்ட தங்கம் போல் ஸ்வர்ண தேஜோ ராமனாக ஜ்வலிக்கின்றார்” என்று ஸ்ரீ ஸ்வாமிஜி தமக்கு தாமே சிந்தனை செய்து தம்மை அமைதிப்படுத்திக் கொண்டார்கள்.



காணபத்யம், கௌமாரம், சௌரம், சைவம், வைணவம், சாக்தம் என்று ஷண்மதங்கள் உலகத்தில் இருப்பதாக சொல்வார்கள். என்னை பொறுத்தவரை குருதான் சர்வமும் என்ற ஏழாவது மதமும் உண்டு. அதுதான் குருதத்வம்.

- ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

# அமரரும் போற்றும் அமர் சேவா சங்கம்

திருக்கோஷ்டியூரில் தனக்குக் கிடைத்த பெரிய பொக்கிஷமான “திருவஷ்டாக்ஷரம்” என்ற உயர்ந்த மந்திரத்தின் பலன் தனக்கு மட்டுமல்லாமல் உலகில் உள்ள அனைவருக்கும் கிடைக்க வேண்டும்; அனைவரும் நலம் பெற வேண்டும்; மண்ணில் நன்றாக வாழ்ந்து விண்ணில் உயர்கதி பெற வேண்டும் என்று கருணையுடன் இருந்த பகவத்ஸ்ரீ ராமானுஜர் அவதரித்து, ஆயிரமாவது ஆண்டு தற்பொழுது நடைபெற்று வருகின்றது. இது நம்மில் பலருக்கு தெரிந்ததே!

ஆம், அனைவரும் நலம் பெற வேண்டும் என்ற உத்தம ஆத்மாக்கள் பலர், எல்லா காலங்களிலும் உண்டு. அவ்வழியில் திருநெல்வேலி ஆய்க்குடியில் “அமர் சேவா சங்கத்தின் ஸ்தாபகர் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள், நம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அன்பிற்கு மிகவும் பாத்திரமானவர். சிறு வயதில், இந்திய தேசிய விமானப்படையில் சேர்ந்த இவருக்கு பயிற்சியின்பொழுது ஏற்பட்ட ஒரு விபத்தில், கழுத்திற்கு கீழ் உள்ள பகுதிகளின் இயக்கமும் உணர்வும் இல்லாமல் போனது. ஆனாலும், அவர் மனோதைரியத்துடன், தளராமல் அதற்கு சிறப்பு பயிற்சிகளை மேற்கொண்டார். அதனால், கொஞ்சம் இயங்கும் நிலையை பெற்றார். அப்பொழுது தன்னைபோல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஒரு புத்துணர்வு தர வேண்டும்; அதற்கான பயிற்சி மையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற உந்துதலால், 1981ஆம் ஆண்டு ஆய்க்குடியில், தனக்கு பயிற்சி

அளித்த Dr. அமர்சிங் என்பவரின் பெயரிலேயே, அமர்சேவா சங்கம் ஆரம்பித்தார். இது இன்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு பயிற்சியும், புதுவாழ்வும் தந்து வரும் ஆலவிருக்ஷமாக சுமார் 32ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெற்று வருகின்றது. பலமுறை ஆய்க்குடி அமர்சேவா சங்கத்திற்கு விஜயம் செய்துள்ள ஸ்ரீஸ்வாமிஜி, கடந்த செப்டம்பர் 21 அன்று, செங்கோட்டையில் பக்தர் ஒருவர் இல்லத்திருமணத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் மனதிற்கு பிடித்தபடி, மானிட சேவையை மகேசன் சேவையாய் செய்யும் ஆய்க்குடி அமர்சேவாசங்கத்திற்கும் சென்றிருந்தார். மேலும் அங்கிருந்தவர்களின் சீரிய சேவையையும் அங்குள்ள பள்ளி குழந்தைகளையும் ஊக்குவித்து ஒரு உரையும் நிகழ்த்தினார்கள். தேவலோகம் என்பது எங்கோ இருப்பது அல்ல. உண்மையில் சேவை செய்யும் இடத்தில்தான் அது இருக்கின்றது. தெய்வம் அங்கே சந்தோஷமடைகின்றது என்பதற்கு ஆய்க்குடி அமர்சேவாசங்கம் ஒரு நிதர்சன உண்மையாக விளங்குகிறது!







ஸ்ரீ ராமானுஜம்

# கச்சியில் ஆனி கருட சேவை-4

ஸ்ரீ பெரியாழ்வார் நமது பெருமாளின் பரதத்வ நிர்ணயம் ஸ்தாபித்ததை ஒட்டித்தான், காஞ்சிபுரத்தில் ஆனி மாதம் கருட சேவை நடைபெறுகிறது என்று பார்த்தோம். ஆனியில் நமது கச்சி தேப்பெருமாள் (தேவப்பெருமாள்) பெரியாழ்வாரின் திருநக்ஷத்திரமான ஸ்வாதி திருநக்ஷத்திரத்தன்று, பெரியாழ்வார் சன்னதிக்கு எழுந்தருளி அவர் அளிக்கும் அனைத்து உபசாரங்களையும் அழகாக ஏற்றுக் கொள்வதைப் பார்த்துக்கொண்டு வருகிறோம்.

பெருமாள், மாப்பிள்ளை தோரணையுடன், மேளக் கச்சேரியை ரசித்தவண்ணம் வர, மாலை தென்றல் மெல்ல வீச, அழகான நடை போட்டுக் கொண்டு நமது தேவப்பெருமாள் இதோ மீண்டும் வந்து கொண்டிருக்கிறார்! நமது ஸ்ரீஸ்வாமிஜியும் பெருமாளின் பின்னழகை களித்தவண்ணம் பின்தொடர்ந்து சென்றுகொண்டு இருந்தார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அடிக்கடி வரதா, வரதா என்று சொல்லிக் கொண்டே நடந்தார். தேப்பெருமாள், பெரியாழ்வார் சன்னதிக்கு எழுந்தருளும் முன்னரே, பெரியாழ்வாரும் தன் சன்னதி வாசலில், பெருமாளுக்காக ஆவலுடன் காத்துக் கொண்டு இருந்தார். பெருமாள் அருகில் வந்தவுடன், பெரியாழ்வாரும் படிகளில் இருந்து இறங்கி வந்தார்.



இப்பொழுது பெருமாளும் பெரியாழ்வாரும் எதிருக்கெதிராக எழுந்தருளிய வண்ணம் சேவை சாதித்தனர். பெருமாள் சடாரி பெரியாழ்வாருக்கு சாற்றப்பட்டது. வந்திருப்பது பெரியாழ்வாருக்கு மாப்பிள்ளை அல்லவா! அதனால் வெற்றிலை பாக்குடன், பூமாலை, வஸ்திரம், பழங்கள் எல்லாவற்றையும் மரியாதையுடன் பெருமாளுக்கு சமர்ப்பித்தார் பெரியாழ்வார். அவற்றை உகப்புடன் ஏற்றக்கொண்டார் பெருமாள். அதன்பின், இருவரும் சேர்ந்தாற்போல் பெரியாழ்வார் சன்னதியில் உள்ள மண்டபத்திற்க்கு எழுந்தருளினர்.

அங்கு பெருமாள் அமர, அவருக்கு பக்கவாட்டில், அவரைப் பார்த்தவாறு பெரியாழ்வார் எழுந்தருளினார். அங்கு சற்றொப்ப இருநூறு பெருமாள் திருமொழி பாசுரங்களை ஸ்ரீவைஷ்ணவோத்தமர்கள் சாதித்து அருளினர். தொடர்ந்து தளிகை அம்சை ஆயிற்று. சாற்றுமுறை தொடர்ந்து, பெரியாழ்வாருக்கு பரிவட்டம் கட்டி, பெருமாள் அணிந்திருக்கும் மாலையே பெரியாழ்வாருக்கு அலங்காரமாக அணிவிக்கப்பட்டது. இவைகளை ஆழ்வார் பூரிப்புடன் ஏற்றுக்கொண்டார். இந்த சமயத்தில், நமது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், நேரம் தாழ்த்திவிட்டோமே என கிளம்ப உத்தேசித்து கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஓடி வந்து, ஸ்ரீஸ்வாமிஜி கைகளில் பழமும், வெற்றிலை பாக்கையும் பெருமாள் பிரசாதமாக அளித்தார். அது அப்பொழுது, பெரியாழ்வார் தன் மாப்பிள்ளை பெருமாளுக்கு அளித்த வெற்றிலை பாக்கும், பழமும்தான். அது கிடைத்தவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி மிகுந்த மிகுந்த சந்தோஷமுற்றார். "பார்த்தாயா! வெற்றிலை பாக்குடன் பெருமாள் நமக்கு பழங்களை கொடுத்தருள்கிறான். இதன் மூலம் நாம் அவனுக்கு 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோம்' என சொல்லாமல் சொல்கிறான் சொல்கிறான்.

சாதாரணமாக பெண் வீட்டாரோ மாப்பிள்ளை வீட்டாரோ, அல்லது இரு வீட்டார்களோ வெற்றிலைப் பாக்கு மாற்றிக் கொள்வதற்கு காரணமே, அது உறவை மேம்படுத்த செய்யும் என்பதால்தானோ! இப்படி வெற்றிலைப் பாக்கு மாற்றிக் கொள்வதால், உறவு மேம்பட்டு, இன்னும் அவர்களை ஒன்றுபடுத்தும் என்பதற்காகத்தான் துறவிகள் வெற்றிலைப் பாக்கு ஏற்றுக் கொள்வதில்லை. இதனால்தான் பெருமாள், அதை நமக்கு கொடுத்து, நாம் நீங்கா உறவு பெற்றோம் என்பதை காண்பிக்கிறான். இந்த பழத்தை பார்! மாதுளையை பாதியாக தந்திருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் இப்படி பழத்தை வெட்டி, பாதியாகத்தான் கொடுப்பார்கள். இது இங்கு விசேஷம். இந்த பிரசாதங்களை மிக பத்திரமாக பார்த்துக்கொள். ஒரு மாதுளை முத்து கூட கீழே சிந்தி விடக்கூடாது. ஒரு பாக்கு கூட விழக்கூடாது. பெருமாள் தந்தது அன்றோ'' என அடியேனை ஸ்ரீஸ்வாமிஜி பணித்தார். நமது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அந்த நேஅரத்தில் அடைந்த ஆனந்த பூரிப்பை, வார்த்தைகளால் சொல்லவும் முடியுமோ? பெரியாழ்வார் பெருமாளை கூடவே பின்தொடர்ந்து, பெருமாளை எழுந்தருள செய்து விட்டு சன்னதி திரும்பினார். பின்னர் தொடர்ந்து, கோவிலில் உற்சவமெல்லாம் முடிந்தவுடன், கீர்த்தனாவளி மண்டபத்திற்கு வந்து, பெருமாள் தந்த பிரசாதத்தை முழுவதுமாக எடுத்துக்கொண்டார் ஸ்ரீஸ்வாமிஜி.

பகவத் பிரசாத மேன்மையை பல முறை, ஸ்ரீஸ்வாமிஜி தமது ப்ரவசனங்களில் விரிவாக கூறி இருக்கிறார். பகவானின் பரம க்ருபையை தாங்கி வந்து, நமக்கு அளிப்பதே பிரசாதம் அல்லவா! அன்று மாலையிலிருந்தே நம் பெருமாள், ஸ்ரீஸ்வாமிஜிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் மூலம் பிரசாதங்களை அவ்வப்போது அனுப்பிக்கொண்டே இருந்தார். ஒரு தாயார் பல நாட்கள் கழித்து திரும்பிய தன் குழந்தைக்கு எப்படி எவ்வளவு கொடுத்தாலும் போதாது என்று ஏதாவது கொடுத்துக் கொண்டே இருப்பாளோ, அப்படி அல்லவோ இங்கு நடந்தது! பெற்ற தாயினும் ஆயின செய்ய வல்ல நாமம் உடையவனுக்கு, இது இயல்புதானே! பால்கோவா, புளியோதரை, தத்யோன்னம், சீரா எனப்படும் கேசரி, காஞ்சிபுரத்துக்கே பெயர் போன காஞ்சிபுரம் இட்லி என பல பிரசாதங்களை பெருமாள் அனுப்பிக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு வைஷ்ணவராக வந்து அன்புடன் விசாரித்து, ஓரிரு வார்த்தைகள் பேசி, பெருமாளிடமிருந்து பிரசாதங்களை ஸ்ரீ ஸ்வாமிஜிக்குக் கொடுத்துச் சென்றனர். (வரதர் வருவார் ..)

பீமராஜன் என்றொரு ஜமீன்தார் இருந்தார். அவரை பார்த்துப் பாடி பரிசு பெற சங்கீத வித்வான் ஒருவர் வந்தார்.

அவர் ஒரு அற்புதமான இசைக்கலைஞர். அவர் பல ஊர்களுக்கும் சென்று தன் திறமையை வெளிப்படுத்தி, பல விருதுகளையும் பட்டங்களையும் வென்றவர். ஜமீன்தார் அவரை வரவேற்று அமர வைத்து, தன் முன் பாடுமாறு வேண்டிக் கொண்டார். அந்த வித்வானும், தன் முழு திறமையையும் வெளிப்படுத்தி திவ்யமான ராகங்களில் பாட ஆரம்பித்தார்.

முதலில் வித்வான் தோடி ராகத்தில் அழகாக பாடினார். அது மிக இனிமையாக இருந்தது. ஜமீன்தார் மிகவும் மகிழ்ந்தார். தன் வேலையாளைப் பார்த்து, ‘‘தங்க நெக்லஸ் ஒன்றை எடுத்து வை’’ என்றார். அதை கேட்ட வித்வான் மகிழ்ந்தார்.

அடுத்தபடியாக, வித்வான், கல்யாணி ராகத்தில் மற்றொரு பாடலை பாடினார். அது தெய்வீக கானமாக அமைந்தது. ஜமீன்தார் மேலும் மகிழ்ந்து, தன் வேலையாளை இம்முறை, ‘‘தங்க கிரீடம் ஒன்றை எடுத்து வை’’ என்றார். அதை கேட்ட வித்வான் முன்னிலும் மகிழ்ந்து, புன்முறுவல் பூத்தார்.

# பாலகர்களுக்கு ஒரு கதை

## சரியான வழி

இப்படியாக அந்த வித்வான், அழகான ராகங்களில் புதிது புதிதாக பாடல்களைப் பாட, ஜமீன்தாரும் புதிது புதிதாக தங்க ஆபரணங்களை எடுத்து வைக்கச் சொல்லிக் கொண்டிருந்தார். வித்வான் உற்சாகம் பெரிதுமுற்று, நிறைய பாடினார். ஜமீன்தாரும் மகிழ்ந்து ஒவ்வொரு முறையும், விலைமதிப்பற்ற ஆபரணங்களை வேலையாளிடம் எடுத்து வைக்கச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முடிவில் தாம் விடைபெறுவதாக வித்வான் தெரிவிக்க, ஜமீன்தாரும் சற்றும் தாமதிக்காமல், ‘‘சரி. கிளம்புங்கள். நன்றாக பாடினீர்கள். செவிகளுக்கு தேவாமிர்தமாக இருந்தது’’ என்றார்.

ஜமீன்தார் கிளம்ப சொன்னாலும் வித்வான் கிளம்பவில்லை. வித்வான் ஜமீன்தாரைப் பார்த்து, ‘‘நான் பாடுகையில் மகிழ்ந்து தங்கத்தினாலான நெக்லஸ், கிரீடம், மாலை, வளையல் என்றெல்லாம் சொன்னீர்களே. அவை எங்கே?’’ என்று கேட்டார்.

ஜமீன்தார் சற்று நிதானத்துடன் புன்னகையோடு, ''வித்வான்! நீங்கள் பாடிப்பாடி, எங்கள் செவிகளை குளிர்வித்தீர்கள். அதே போல் நானும் தங்க நகைகளின் பெயரை சொல்லிச்சொல்லி, உங்கள் காதுகளை குளிர்வித்தேன். நீங்கள் பாடியதற்கும், நான் சொன்னதற்கும் சரியாகிவிட்டது'' என்றார். வித்வான் மிகுந்த ஏமாற்றம் உற்றார்.

பாலகர்களே! இந்த வித்வான் போலத்தான் நாம் உண்மையான ஆன்மீக அனுபவம் ஏதும் பெறாமல், உயர்ந்த பக்தி, வேதாந்தம், ஞானம் என பேசி வந்தோமானால், ஜமீன்தார் எப்படி வித்வானுக்கு உண்மையாக பரிசுகளை தரவில்லையோ, கடவுளும் நமக்கு அப்படி உண்மையான ஞானத்தை தருவதில்லை. அனுபவம்தான் முக்கியம். அனுபவமற்ற பேச்சினால் பயன் ஏதுமில்லை. அனுபவம் பெறவோ, குருநாதர் பாதங்களை பிடித்துக் கொண்டு, அவர் காட்டும் வழியில் செல்வதொன்றே சரி!


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates


rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com




**MADHURASMARANAM - My Guru As I See Him, ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் திவ்ய சரித்திரத்தை, ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர், Dr ஆ பாக்யநாதன்ஜி அவர்கள் 10 Oct 2016 அன்று சென்னையில் நிகழ்த்திய தமிழ் உரை DVD வடிவத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரத்தன்று வெளியிடப்பட்டது. இதன் விலை Rs 100/-, கிடைக்கும் இடம்: மதுரம் ஸ்டோர்ஸ், Plot No 11, Door No 4/11, Nethaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 600083, Ph: 9442613710**

On the auspicious occasion of the Jayanthi Utsav of Sri Sri Swamiji, a refreshed version of the webpage www.namadwaar.org was launched with interactive and lively features which include an online radio NAMADWAAR'S WEB VOICE. Tune in to be in satsanga all through your day!







**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருவடி நிழலில் இயற்றப்பட்ட கீர்த்தனங்களை குரு கீர்த்தனங்களாக Infant Krishna பஜனை மண்டலியினர் பாடிய பாடல்களின் தொகுப்பு Audio CD Vol 6, Vol 7 ஆக வெளியிடப்பட்டுள்ளது.**



**நவராத்ரி உத்சவம்,**
**சென்னை,**
1-10 Oct 2016











**தஞ்சை State Bank Colony பிள்ளையார் கோவிலில் உபந்யாசம்,** 19 Oct 2016






**கடலூர் மஞ்சக்குப்பம் சுப்புராயுலு ரெட்டியார் கல்யாண மண்டபம், கூட்டுப் பிரார்த்தனை,** 27 Oct 2016





## சிங்கப்பூர் நாமத்வாரில் சத்சங்கம்

3 Oct முதல் Oct 8 வரை ஸ்ரீ ராமானுஜம்ஜி சிங்கப்பூர் நாமத்வாரிலும், ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலிலும், பக்தி யோகா என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் உரையாற்றினார். இதில் தினமும் 50 சத்சங்க அன்பர்கள் கலந்துகொண்டனர்.


## சென்னையில் மதுரஸ்மரணம்

MADHURASMARANAM — My Guru As I See Him, ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் திவ்ய சரித்திரத்தை, ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர், Dr ஆ பாக்யநாதன்ஜி அவர்கள் 10 Oct 2016 அன்று சென்னையில் தமிழில் உரையாற்றினார். இதை உலகெங்கிலும் உள்ள அன்பர்கள் கண்டு களிக்க Live Webcast செய்யப்பட்டது






# நியூஸிலாந்தில் சத்சங்கம்





Oct 10 முதல் Oct 13 வரை நியுசிலாந்து, ஆக்லாந்த், சாந்தி நிவாஸில், பூர்ணிமாஜி பகவத்கீதா 12வது அத்யாயம் பற்றி உரையாற்றினார். எண்பதிற்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்துகொண்டனர்.

# Motivational Workshops for Students





GOD India Trust சார்பில் Dr ஜனனி வாசுதேவன், Oct 16 சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைகழகத்தில், Mindfulness for the Field of Medicine என்ற தலைப்பில் மருத்துவ மாணவர்களுடன் உரையாற்றினார்.

Oct 21 அன்று சென்னை அகர்வால் வித்யாலயா பள்ளியில் Tolerance என்ற தலைப்பில் உரையாற்றினார். இதில் 300 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

# மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் சத்சங்கங்கள்









**Oct 16-22, துபாயில் நடைபெற்ற ஸ்ரீ ராமுஜியின் சத்சங்கங்களில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்துகொண்டார்கள். காலையில் ஏகாதச ஸ்கந்தம் பாராயணமும் நவயோகி உபாக்யானமும் நடைபெற்றது. மாலையில் க்ருஷ்ண கதா ப்ரவசனத்தை எண்ணற்றோர் கேட்டு இன்புற்றனர். கோலாஹலமாக நடந்த ராதாகல்யாண வைபவத்துடன் சத்சங்கங்கள் பூர்த்தியாயின. கல்ந்துகொண்ட அத்துனை பக்தர்களுக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பிரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீமதி விஜயா, ஸ்ரீ நாராயணஸ்வாமி ஒரு பெரிய மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். Oct 23-26, அபுதாபியில் காலையில் ராமுஜி 'கண்ணினுள் சிறுத்தாம்பினால்'- மதுரகவியாழ்வாரின் பாசுரங்களைப் பற்றி பேசினார்கள். நாற்பதுக்கும் மேற்பட்டோர் கேட்டனர். மாலையில் க்ருஷ்ண கதா - ஆங்கிலத்தில் பேசினார். பூர்த்தியில் ராதாகல்யாண வைபவமும் கொண்டாடப்பட்டது. சிறப்பாக நடைபெற்ற இந்த சத்சங்கத்தை, ஸ்ரீமதி சுமா, ஸ்ரீ பத்மனாபன், மற்றும் அன்பர்கள் ஒருங்கிணைத்து நடத்தினர்.**





செப்டம்பர் மாதத்தில் திருவள்ளூர் தீர்த்தீஸ்வரர் திருக்கோவிலில் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் முரளிஜி செய்தார். நானூறுக்கும் மேற்பட்ட பக்தர்கள் இதில் கலந்து கொண்டு சிரவணம் செய்தனர். மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனையை சுமார் 21 பள்ளிகளில் 8000 மாணவர்கள் மத்தியில், காரைக்குடி, திருவள்ளூர், சோளிங்கர், அரக்கோணம், திருத்தணி அக்கிய ஊர் பள்ளிகளில் முரளிஜி திறம்பட நிகழ்த்தினார்.

## ஸுகதால் யாத்திரை







Oct 15 முதல் Oct 22 வரை நூற்றுக்கும் மேற்பட்ட சத்சங்க அன்பர்கள் ஸுகதால் யாத்திரை சென்றனர். அந்த புண்ய தலத்தில், ஸ்ரீமத் பாகவத சப்தாஹமும், ஈரோடு ஸ்ரீ பாலாஜி பாகவதர், ஸ்ரீ ராமஸ்வாமி மற்றும் குமாரி காயத்ரியின் உபன்யாசமும் நடைபெற்றது. இந்த யாத்திரைக்கான ஏற்பாடுகளை ஸ்ரீமதி கல்பனா ஐயர் செவ்வனே செய்திருந்தார்.

**0ct 8 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் இந்திய பாரம்பரியம் சம்பந்தமான வினாவிடை போட்டியின் இறுதி சுற்று நடைபெற்றது. 270 பள்ளிகள் கலந்துக்கொண்ட தேர்வு சுற்றிலிருந்து, 80 பள்ளிகள் அரை இறுதி சுற்றில் கலந்துக்கொண்டனர். 10 பள்ளிகள் இறுதிச் சுற்றிற்கு தேர்வாகி, Srivi Lions என்ற ஸ்ரீவில்லிபுத்துர் மாவட்ட பள்ளி முதல் இடம் பெற்றது. தூத்துக்குடி சத்சங்கத்தை சேர்ந்த ஸ்ரீமதி வினோகா போட்டியை நடத்தினார். GOD India Trust சார்பில் ஸ்ரீ விஜய் மற்றும் Dr ஜனனி வாசுதேவன் பங்கேற்றனர்.**

## தூத்துக்குடியில் புராநவா
















தமிழகம் முழுவதுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் நமது மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளைக்குறித்து மாலையணிந்து விரதமிருந்து மஹாரண்யத்திற்கு பெருமாளை ஸேவிக்க கடைசி சனிக்கிழமையன்று பாதயாத்திரை (15/10/2016) வந்திருந்தனர். பக்தர்கள் புடைசூழ மஹாமந்திர நகர ஸங்கீர்த்தனமும் நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் ஆடிப்பாடி நம் பெருமாளை கொண்டாடினர். பிறகு அகண்டதீபமேற்றி ஸ்ரீ பம்மல் பாலாஜி அவர்களின் ஸத்ஸங்கம் நடைபெற்றது. அன்னக்கூட உற்சவம், லட்டு ஸேவை மற்றும் பத்மாவதி கல்யாணம் நடைபெற்றது.







# புரட்டாசி மாத உத்ஸவங்கள்

திருநீர்மலை நீர் வண்ண ஸ்ரீ ரங்கநாத பெருமாள் திருக்கோவிலில், புரட்டாசி மாதம் சனிக்கிழமை, Oct 8 அன்று சத்சங்க அன்பர்கள் திவ்ய பிரபந்தங்கள் பாடி, நாம கீர்த்தனம் செய்து, படி உத்சவம் கொண்டாடினர்.



# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

# அஸுபதி

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

**நாம் இந்த முறை பார்க்கப் போகும் வார்த்தை 'அஸுபதி' எனும் சொல். 'பஸுபதி' கேள்விப்பட்டிருக்கிறோம்! ஆனால் 'அஸுபதி' கேட்டதில்லையே! என்று நீங்கள் நினைக்கலாம். ஆம்! இது ஒரு அரிதான அழகிய சொல். 'அஸுபதி' என்றால் ப்ராணபதி என்று அர்த்தம். 'அஸு' என்றால் ப்ராணன், உயிர் என்று பொருள். அதனால் 'அஸுபதி' என்றால் உயிருக்கு உயிரான ப்ராணநாதன் என்று அர்த்தம்.**

ஸ்ரீ ருக்மிணி தேவி, ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறாள் அல்லவா? அதில் கடைசி ஸ்லோகத்தில் என்ன கூறுகிறாள் என்றால் - "உனது அருள் எனக்கு கிடைக்கவில்லை என்றால், நீ வந்து என்னை கைபிடிக்கவில்லை என்றால், வ்ரதமிருந்து நூறு ஜன்மமானாலும் உயிரை விடுவேனே அன்றி வேறொருவரை மணக்க மாட்டேன்". "*ஜஹ்யாம் அஸுன் வ்ரதக்ருஷான்ஷதஜன்மபி: ஸ்யாத்*" என்பதில் 'அஸுன் ஜஹ்யாம்' - உயிரை விடுவேன் என்று கூறும் இடத்தில் 'அஸுன்' என்ற பதம் வருகின்றது.

'அஸுபதி' என்ற சொல் ஸ்ரீமத் பாகவதத்தில் எங்கு வருகின்றது என்று பார்த்தோமானால், அது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. வ்ருத்ராஸுரன் என்ற ஒரு பயங்கரமான அஸுரனின் கதை பாகவதத்தில் வருகின்றது. தனது பிள்ளையான விஸ்வரூபனை இந்திரன் கொன்றுவிடவே, த்வஷ்டா என்பவர் கோபம் கொண்டு இந்திரனை அழிக்க ஒரு யாகம் செய்கிறார். இந்திரனை கொல்வதற்காக ஒருவன் தோன்றவேண்டும் என்று 'இந்த்ரஷத்ரோ விவர்தஸ்வ' என்று மந்திரம் கூறி யாகம் செய்யும்போது ஸ்வரம் தப்பி உச்சரித்ததால் இந்திரனால் கொல்லப்படும் ஒருவன் தோன்றிவிட்டான், அதுதான் இந்த வ்ருத்ராஸுரன். ஆனால் என்ன ஆச்சரியம் என்றால், கடுமையான

உருவம் கொண்ட இந்த அஸுரனுக்குள்ளே குழைவான ஒரு உள்ளம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அந்த உள்ளத்தால் அவன் ஹரியிடம் மாதுர்ய பாவத்தில் பக்தி செய்கிறான் என்பது ஒரு வியப்பு! இது எப்பொழுது தெரிகின்றது என்றால், இந்திரனோடு கோரமாக யுத்தம் செய்து கொண்டிருக்கையில், யுத்தகளத்தில் இந்திரனை பார்த்து - "பயப்படாமல் உன் எதிரியான என்னை உனது வஜ்ராயுதத்தால் அடி! நான் எனது மனதை ஹரியிடம் வைத்து அவரை அடைவேன்" என்று தீரமாக கூறுகையில் மிகவும் அழகான நான்கு ஸ்லோகங்களால் ஒரு ஸ்துதி செய்கிறான். அதில் பகவானை பார்த்து 'அஸுபதே', 'ப்ராணகாந்த' என்று கோபிகைகள் கண்ணனை அழைப்பது போல் அழைக்கிறான். இப்படி ஒரு அழகிய பதம் வேறு எங்குமே இல்லை! ஒரு அஸுரன் இப்படி மாதுர்ய பாவத்தில் பகவானை அழைப்பது தான் அதிசயம். ஹே அஸுபதே! நான் என்றும் உனது திருவடிகளில் தாஸனுக்கு தாஸனாக, மனதால் உன் குணங்களையே நினைத்துக் கொண்டு, உடலால் உனக்கே ஸேவை செய்து கொண்டு, வாக்கினால் உன் புகழையே பாட வேண்டும் என்று மிக உருக்கமாக ப்ரார்த்திக்கிறான்.

க்ருஷ்ண பக்தியில் திளைத்த ஸ்ரீ வல்லபாசார்யர் இந்த வ்ருத்ராஸுரனின் நான்கு ஸ்லோகங்களில் அத்தகைய ஒரு கோமளமான பாவமும் பக்தியும் உள்ளதால் அதை எடுத்து விஸ்தாரமாக வ்யாக்யானம் செய்துள்ளார். அதற்கு 'சதுஸ்லோகி' என்று பெயர்.

Dr. Shriraam Mahadevan

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256

ENDOCRINE AND SPECIALITY CLINIC

New 27/1, Old 11/1, (Gr. Floor), 4th Cross Street, RK Nagar,

Mandaveli, Chennai -600028

(Next to Krishnamachari Yogamandiram)

Tel: 2495 0090, Mob: 9445880090

E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.com

# தன்னம்பிக்கை வளர்த்தல்

ஜனனீ வாசுதேவன்

நம்முள் பலருக்கு நம்மைப் பற்றிய குறுகிய மனப்பான்மை வாழ்க்கையில் ஏதேனும் ஒரு பகுதியிலாவது இருக்கும். இந்த குறுகிய மனப்பான்மையால் நம் நம்பிக்கையும் குறைந்துவிடுகிறது. பல சமயங்களில் வெற்றி அடைவதற்கு நாம் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தாலும், எப்படி நம்பிக்கையை வளர்த்துக்கொள்வது, எப்படி தக்கவைத்துக்கொள்வது என்பதே கேள்வி?



## பிறருடன் ஒப்பிடுவதை நிறுத்த வேண்டும்

நாம் அனைவரும் சில சமயங்களில் நம்மை யாருடனோ ஒப்பிட்டு, அவர்கள் போலவே இருக்க முயன்றிருக்கிறோம். நாம் கண்டறிந்தது என்னவென்றால் நாம் அவர்களைப்போல் இருக்க இயலாது. அவர்களின் கடந்த காலம் வேறு, மரபு வேறு, மேலும் அவர்கள் உலகிற்கு காண்பிக்க இருப்பது என்ன என்பதை பற்றி நாம் ஏதும் அறியோம். தான் அல்லாத ஒன்றை போல் இருக்க முயற்சி செய்வதற்கும் , பிறரின் ஒப்புதலுக்காக போராடுவதற்கும் நம் ஆற்றலை செலவழிப்பதால் நமது தன்னம்பிக்கை குறைகின்றது. பிறருடன் ஒப்பிட செலவிடும் கவனத்தை நம் பக்கமாக, நம் குறிக்கோள்களை நோக்கி திருப்பினால் உடனடியாக நம் தன்னம்பிக்கை வளர்வதை காண முடியும்.

## உடற்பயிற்சி

உடற்பயிற்சி/சைக்கிள் ஓட்டுவது/நடைபயில்வது/நீச்சல் போன்ற பயிற்சிகள் நம்மை பற்றிய நல்லுணர்வை ஏற்படுத்தி, ஆற்றலை பெருக்கி, வாழ்க்கையில் சிறந்த வாய்ப்புகளையும், சிறந்த கண்ணோட்டத்தையும் அளித்து ஊக்குவிக்கின்றது. உடற்பயிற்சியால் உடலில் எண்டார்பின்ஸ் (Endorphins) உற்பத்தியாகின்றது. எண்டார்பின்ஸ் என்பது நமக்கு புத்துணர்வூட்டும் மூளையில் உள்ள ஓர் ரசாயனம் ஆகும். உடற்பயிச்சிக்கான கால அவகாசம் இல்லை என்று தோன்றினால், நம் வாழ்க்கையின் எந்த மூன்று பகுதிகளில் நாம் செலவிடும் 10 நிமிடங்களை எடுக்கமுடியும் என கண்டறிந்து அந்த 30 நிமிடங்களை உடற்பயிற்சிக்கு பயன்படுத்திக் கொள்வோம்.

## குறுகிய வட்டத்திலிருந்து வெளிவருதல்




இதை செய்வதற்கு முதலில் நாம் எதை நம்மால் இயலாது என்று எண்ணி புறக்கணித்து வருகின்றோம் என்று ஆராய வேண்டும். ஒரு கூட்டத்தில் பேசுவதற்கு தயக்கம் இருக்குமாகில், அப்படி பேசுவதற்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதை புறக்கணிக்காமல், என்ன பேச வேண்டும் என்பதை தீர்மானித்து, ஒழுங்காக தயார் செய்துகொள்ள வேண்டும். இப்படி செய்வதால் எதிர்வரும் சங்கட நிலைகளை எதிர்கொள்ள முடியும். நாம் நம் குறுகிய நிலையை விட்டு அடிக்கடி வெளிவருகையில் நம்பிக்கை நன்கு உயர்கின்றது, வாழ்க்கையில் பல நல்ல சந்தர்ப்பங்களை அறியமுடிகின்றது. மேலும் மேலும் வெற்றிகளும் கிடைக்கின்றது. இப்படி வளரும் தனிப்பட்ட வெற்றிகள் தன்னம்பிக்கையின் வளர்ச்சியை குறிக்கும்.

## சுயச்சிந்தனையில் கவனம் தேவை

நம் மனதிற்கு நாள் முழுதும் நாம் அனுப்பும் எண்ணங்களே நம் முன் இருக்கும் வாய்ப்புகளை காணும் திறனையும், கிடைத்த வாய்ப்பை செயல்படுத்தும் ஆற்றலையும், அதனால் கிடைக்கும் வெற்றியையும் பிரதிபலிப்பதாக இருக்கும். நம் ஆற்றலை குறைக்கும் எண்ணங்களையும், நம்மை தோல்வியுறச்செய்யும் எண்ணங்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களை அறவே நீக்கி, ஆக்கப்பூர்வமான நம்பிக்கையூட்டும் வார்த்தைகளாக மாற்றிவிட வேண்டும். பலமுறை தொடர்ந்து ஆக்கப்பூர்வமான எண்ணங்களை நம்முள் வளர்த்துக் கொண்டிருந்தால், நம் நம்பிக்கையும் உயரும்.



## சரியான ஆகாரம்

சீரான உணவு இல்லாமையால் மனசோர்வு ஏற்படுகின்றது. இதனால் ஏற்படும் எதிர்மறை உணர்வுகளால் தன்னபிக்கை தான் குறைகின்றது. நம்மால் இயன்றவரை அடிக்கடி antibiotics பயன்படுத்துவதையும், பதப்படுத்தப்பட்ட உணவுகளையும், அதிக சர்க்கரை மற்றும் மாவுச்சத்து (carbohydrate) நிறைந்த உணவுகளையும் உட்கொள்வதை தவிர்க்கவும். ஆரோக்கியமான உணவு நம் மனநிலையை அனைத்து விஷயங்களிலும், ஏன் நம்மையும் கூட உயர்த்துகிறது. தவிர்க்க வேண்டிய ஓர் உணவை தவிர்க்கவேண்டும். நமக்கு நல்லுணர்வளிக்கும் ஓர் உணவை கண்டறிந்து அதை சேர்த்து கொண்டு, நம் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேன்படுத்திக் கொள்ளவேண்டும். இதை ஒருவாரத்திற்கு செயல்படுத்தி நம் மனநிலையிலும், நம்பிக்கை அளவிலும் ஏதேனும் நல்ல மாற்றம் ஏற்பட்டதா என்பதை கவனிக்க வேண்டும்.

## மஹாமந்திரத்தையும் பகவானையும் பற்ற வேண்டும்

மஹாபாரத யுத்தம் முடியும் தருவாயில் இருக்கும் அந்த போர்பூமியை மனதில் கற்பனை செய்துகொள்ளவும். ஒரு பக்கம் சல்லியனை தேரோட்டியாக கொண்ட மஹா வீரனான கர்ணன் மற்றும் கௌரவர்கள். எதிர்பக்கத்தில் பாண்டவர்கள், அதிலும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை தேரோட்டியாக கொண்ட அர்ஜுனன். உற்சாகம் நிறைந்த கர்ணனை தேரோட்டியான சல்லியன் தன்னம்பிக்கையை குலைத்து பலவீனமாக்குவதை நாம் பார்க்கின்றோம். அர்ஜுனனோ பயத்தின் உச்சியில் இருக்கின்றான். தன் உற்றார் உறவினர்களுடன் போர் புரிவதையை எண்ணி பதட்டம் அடைந்த நிலையில் இருக்க, ஸ்ரீ கிருஷ்ணன் அவனுக்கு அறிவுறுத்தி ஊக்கமளித்து உற்சாகப்படுத்துகிறான். தன்னம்பிக்கையை குலைப்பது தீமையானது; ஊக்கம் அளிப்பதே தெய்வீகமானது. கடவுள் என்பவர் வேறு யாருமில்லை. எவர் நம்மை என்றென்றும் நன்மையை நோக்கி வழி நடத்திச் செல்கின்றாரோ அவரே கடவுள். நம்பிக்கையுடன் கடவுளைப் பற்றி, அவன் நாமங்களை சொல்லிக்கொண்டே இருப்பதால் நம் நம்பிக்கை மேன்மையடையும்.

# பண்டைய பாரதத்தில் அணு தத்துவம்

பாலாஜி ராமசந்திரன்

**உலகம் தட்டை ஆனது; நெப்ட்யூன், யுரேனஸ் ஆகியவை கோள்கள் தான்; அண்டக்கூட்டம் (Galaxy) மிக பெரியதான ஓர் அளவிற்கு உட்பட்டது போன்ற கொள்கைகளை எல்லாம் அறிவியல் மாற்றிக் கொண்டே வந்திருக்கிறது. ஆனால், அப்படி இறுதியாக சொல்லப்பட்டவை எல்லாம் நமது வேதம் மற்றும் புராணங்களில் சொல்லப்பட்டவை போலவே இருக்கின்றன. இதற்கு எண்ணிலடங்கா உதாரணங்களை சொல்லலாம். உலகம் கோள வடிவானது என்பதை பூகோளம் என்றே நாம் அழைத்து வந்திருக்கிறோம் பாருங்கள்! பூகோள கல்வியில், பூமி உருண்டையுமல்ல, தட்டையுமல்ல, அது கோள வடிவம் என்பதை எவ்வளவு அழகாய் சொல்லி தந்திருக்கிறார்கள்!**

**நீருக்கு இரசாயன குறியீடு H2O - இரண்டு அணுக்கள் ஹைட்ரஜன் மற்றும் ஒரு அணு ஆக்சிஜன் சேர்ந்தது என இதற்கு பொருள். இதை வேதம், 'ப்ராணன் ஏகம் அன்ய த்வே' - ப்ராண வாயு ஒன்றும் மற்றது இரண்டும் என அழகாய் சொல்கிறது. 'சந்த்ரமஸி க்ருஷ்ணம்' என வேதத்தில் வருகிறது. க்ருஷ்ண வர்ணம் என்றால் கருப்பு. சந்த்ரமஸி - சந்திரனில் என அர்த்தம். இன்றும் சந்திரனில் உள்ள மண்ணை பார்க்கையில் அது கருப்பாய் இருப்பது தெரிய வருகிறது! இன்று டிரில்லியன் கேலக்ஸிஸ் இருக்கின்றன என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நம் புராணங்களிலும், கீதையிலும் பகவானின் ஒவ்வொரு மயிர்க்காலிலும் அண்டாண்டங்கள் உள்ளன என சொல்லப்பட்டிருக்கிறது. அது எண்ண முடியாததாகும். இதை இன்று விஞ்ஞானம் ஒப்புக்கொள்கிறது.**

இராமன் கட்டிய பாலம் எவ்வளவு வயது? என, அந்த கல்லின் வயதை கொண்டு ஆராய்ச்சி செய்தார்கள். சுமார் 19.75 லக்ஷம் - பத்தொன்பதேமுக்கால் லக்ஷம் வருஷம் என கணக்கு சொல்கிறார்கள். இது அப்படியே ராமன் தோன்றிய காலத்தை, கனகச்சிதமாக சொல்கிறது. அதனாலேயே நமது யுகங்களின் கணக்கையும் துல்யமாக ஒப்புக்கொள்ள வைக்கிறது.

ஒவ்வொரு சிறு விஷயத்தையும், நமது சமையலிலிருந்து, விண்வெளி வரையிலும் அதற்கும் மேலான விஷயங்களுக்கும் நமது புராணங்களும், வேதங்களும், சித்தர்களும், முனிவர்களும் சொன்னதே நிரூபிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இன்றைய Atomic Theory - அணுக்கொள்கை பிரசித்தியான ஒன்று. அணுவை எந்த அளவிற்கு பிளக்க முடியும் என ஆராய்ச்சிகள் செய்கின்றனர். ஆனால், நமது ஔவைப்பிராட்டி, அணுவிற்கு அணுவாய் என்கிறாள். அஃதாவது, அணு அளவை ஒரு முழு அளவு என கொண்டால், அதற்கு அணு அளவு! அடுத்தபடியாக அப்பாலுக்கு அப்பாலாய் என்கிறாள். அதென்ன அப்பாலுக்கு அப்பால்! The Farthest to the Farthest - அளவிட முடியாத சிறிய அளவை சொன்னவள், அளவிட முடியாத பெரிய அளவையும் சொல்கிறாள். Infinite! ஆக பண்டைய பாரதத்தினரின் அறிவு பெரியது என்பதை மறுக்கவே முடியாது. நமது தமிழகத்து கம்பன் அநாயசமாக அணுவை நூறாக பகுக்கலாம் என கம்பராமாயணத்தில் சொல்வது, வியக்க வைக்கிறது. இப்படி எராளத்திலும் ஏராளமாய் உதாரணங்கள். பிரிக்க முடியாதது என ஒன்று இருக்கிறது என்று சொல்லியதும் நம்மவர்கள்தான்!!! இன்னும் அந்த அளவிற்கு அறிவியல் வரவில்லை!

2600 ஆண்டுகளுக்கு முன் நமது ஆச்சார்ய கணாத கூட (இது கூட டால்டனுக்கு முந்திதான்), பல அன்றாட நிகழ்வுகள் எதனால் நிகழ்கிறது (பழங்கள் கனிதல் முதலியன) என்பதை ஆராய்ச்சி செய்து, அதை கொண்டும், அணுக்கள் வெவ்வேறு விகிதத்தில் சேருகையில் வெவ்வேறு வேதியியல் நிகழ்வுகளை நிகழ்த்தி, வெவ்வேறு பொருள்களை தருகின்றன என்பதை எல்லாம் சேர்த்து, அணுக்கொள்கையை ஸ்தாபித்தார். ‘அணு’ மற்றும் ‘பிரபஞ்ச’ தத்துவத்தினை போதிக்க அவர் ‘வைசேஷிகா’ என்கின்ற தத்துவப்பள்ளியை தோற்றுவித்தார்.

மேலும், அவர் தன்னுடை ஆராய்ச்சியின் பயனாக 'வைசேஷிக தர்ஷன்' என்கின்ற நூலினை படைத்ததின் வாயிலாக **அணு கோட்பாட்டின் தந்தை** என்று போற்றப்படுகின்றார்.


பரவலாக ஒப்புகொள்ளப்பட்ட அவருடைய கண்டுபிடிப்புகளைப்போல் இன்னும் பற்பல மேலான விஷயங்களை நமது வேதங்கள், புராணங்கள், கோவில்கள், புலவர்கள், ஞானிகள், பக்தர்கள், கலாசாரத்துடன் பின்னி இருக்கும் விஷயங்கள், பண்டைய இலக்கியங்கள் ஆகியன சொல்கின்றன என்பது நிதர்சனம். ஆனால், அவை அணு போலவே நம் கண்களுக்கு தெரியாத உண்மையாக இருக்கிறது!




தூத்துக்குடியை சேர்ந்த திரு.கதிரேசன் அவர்கள், ஸ்ரீஸ்வாமிஜியை நேரில் பார்ப்பதற்கு முன்பாகவே, ஸ்ரீஸ்வாமிஜியின் உபதேசங்களை தொலைக்காட்சி மூலம் செவிமடுத்தவர். அந்த நல்ல செய்திகள் எல்லோரையும் சென்று அடையவேண்டும் என்பதற்காக, தானாகவே எல்லோரையும் அந்நிகழ்ச்சியை பார்க்க சொல்லி, விளம்பரம் கொடுப்பார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், திருவனந்தபுரம் அபேதானந்தா ஆஸ்ரமத்தில் பிரவசனம் நிகழ்த்தியபொழுது அங்கு வந்து தரிசனம் செய்தார். மூன்று நாட்கள் ஸ்ரீஸ்வாமிஜியுடன் தாங்கி இருந்தார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக, தன் குடும்பம் முழுவதையும் குருநாதர் திருவடிகளில் சமர்ப்பணம் செய்தார். கையில் ஸ்ரீஸ்வாமிஜியின் படம் போட்ட மோதிரம், கழுத்தில் அதேபோல் டாலர். அவருடைய காரில் பெரிய அளவில், எங்களின் ஒரே தெய்வம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி என்று எழுதி இருப்பார். ஸ்ரீஸ்வாமிஜியின் நீண்ட நாள் கனவான "நாமத்வாரை" தூத்துக்குடியில் முதன்முதலில் செயல்படுத்தினார். முதன்முதலில் தூத்துக்குடியில் கூட்டுபிரார்த்தனையை விமரிசையாக நடத்தினார். தானும் நாமா சொல்லிக்கொண்டு, பிறரையும் எப்பொழுதும் நாமா சொல்ல வைப்பார். தென் மாவட்டங்களில் நாமம் வளர ஒரு ஆலமரம் போல் இருந்தார். அவரை தூத்துக்குடி பக்தர்கள் எல்லோரும் 'அப்பா' என்றே ஆசையுடன் அழைப்பார்கள். ஸ்ரீஸ்வாமிஜிக்காக அவர் ஒரு கோயிலும் கட்டினார். அம்பாசமுத்திரம் நாமத்வார் கட்டிட பணியில், தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்த நிலையில், 15.10.2016 புரட்டாசி சனிக்கிழமை அன்று ஸ்ரீஸ்வாமிஜியின் பாதுகைகளில் குருபக்த கதிரேசன் இரண்டற கலந்தார். ~ ஆசிரியர், மதுரமுரளி

# சைதன்ய மஹாப்ரபு - ஜகன்னாத மிஷ்ரர் ஸசி மாதா விவாஹம்

வங்காள மாநிலத்தில் குலியா என்றொரு கிராமம் இருந்தது. குலியா பின்னர் நவத்வீபம் என்று அழைக்கப்பட்டது. கல்வியின் மையமாக அது திகழ்ந்ததால் பல பண்டிதர்கள் அங்கு குடியேறியிருந்தனர்.







அப்படிப்பட்ட ஒரு பண்டிதர் அத்வைதாசார்யர் ஆவார். அவருக்கு பல மாணவர்கள் இருந்தனர். அவர்களுக்கு அவர் வேதங்களும் புனித நூல்களும் கற்றுக்கொடுத்தார்.


மாதவேந்த்ரபுரியின் அருள் பெற்றதிலிருந்து, அத்வைதாசார்யர் இப்படி ஏக்கமுடன் உருகிய மனதுடன் பகவானிடம் ப்ரார்த்தனை செய்தார்.





அதே ஊரில் கங்காதாஸ் என்ற மற்றொரு பண்டிதர் இருந்தார். அவர் தான் வைத்திருந்த பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் தேடிக்கொண்டாருந்தார்.

ஓவியர்: பாலமுரளி






பண்டிதர்களின் மத்தியில் ஒருவர் மட்டும் தனித்து விளங்கினார் ....



ஜகன்னாத மிஷ்ரரின் அறிவாற்றலைக் கண்டு கவரப்பட்ட கங்காதாஸ் அவரை தனது பாடசாலையின் ஆசிரியராக நியமித்தார். ஜகன்னாத மிஷ்ரரின் புகழ் வங்காளம் முழுவதும் பரவியது. ஒரு நாள் அது, அதே ஊரில் வசித்த மற்றொரு பண்டிதரான நீலாம்பர சக்கிரவர்த்தியின் செவிகளுக்கும் எட்டியது.







அனைவரின் சம்மதமும் பெற்ற பின்னர், ஜகன்னாத மிஷ்ரருக்கும் ஸசி தேவிக்கும் திருமணம் நடைபெற்றது.

ஜகன்னாத மிஷ்ரரும் ஸசி தேவியும் வேறு யாரும் இல்லை! சைதன்ய மஹாப்ரபுவின் பெற்றோரே ஆவர்!

# புராநவா



**<u>சென்ற மாத புராநவா பதில்</u>**

**ஸ்ரீ ராம அவதாரத்திலும், ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்திலும் வரும் மூவர் - ஜாம்பவான், ஹனுமான், பரசுராமர்**

நடராஜரின் இந்த சிற்பம், எங்கு உள்ளது?

**(விடை அடுத்த இதழில்)**



# சனாதன புதிர் 90

## ஆத்ரேயன்

1. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் எத்தனை பகுதிகள் எத்தனை அத்யாயங்களை கொண்டது?
2. சாணக்யர் அர்த்த சாஸ்திரத்தை எப்படி ஆரம்பித்துள்ளார்?
3. சுக்ராச்சாரியார், பிரஹஸ்பதி இயற்றிய நீதி நூல்கள் எப்படி அழைக்கப்படுகின்றன?
4. கௌடில்யரின் மற்ற நூல்கள் என்ன?
5. சாணக்யரின் மற்ற பெயர் என்ன? இதைப்பற்றி எங்கே காண முடிகிறது?
6. கௌடில்யர் தனது நூல்களை எப்பொழுது இயற்றினார்?
7. துரியோதனன் பீமசேனனை கொல்ல எந்த இடத்தை தேர்ந்தெடுத்தான்?
8. துரியோதனன் பீமனை கொல்ல என்ன செய்தான்?
9. கங்கையில் எறியப்பட்ட பீமன் எங்கு சென்றான்? பீமனை பார்த்தவர்கள் யார்?
10. நாகலோகத்தில் பீமனுக்கு என்ன கொடுக்கப்பட்டது? அதன் விளைவு என்ன?

## பதில்கள்

1. 15 பகுதிகள் - 149 அத்யாயங்கள்.
2. ஓம் நம: சுக்ரப்ருஹஸ்பதிப்யாம் - சுக்ரபகவானுக்கும் ப்ருஹஸ்பதி பகவானுக்கும் வணக்கம் தெரிவித்து ஆரம்பித்து உள்ளார்.
3. சுக்ரநீதி; பார்ஹஸ்பத்யம்.
4. சாணக்ய சூத்ரம்; சாணக்யநீதி தர்ப்பணம்; அர்த்த சாஸ்திரம்.
5. விஷ்ணுகுப்தர் - தண்டி படைத்த தசகுமார சரித்திரத்தில்.
6. 321 BC - 290 BC.
7. பிரமாண கோடி என்ற இடத்தில் உதகக்ரீடனம் - தண்ணீர் விளையாட்டு இல்லத்தை அமைத்தான்.
8. காலகூடம் என்ற விஷம் கலந்த உணவை பீமனுக்கு கொடுத்து மயக்கமான நிலையில் கொடிகளால் கட்டி கங்கையில் எறிந்தான்.
9. நாகர்கள் என்ற பாம்புகள் - வாசுகி என்ற பாம்பு - அர்க்கன் என்ற பாம்பு - இது குந்தியின் அப்பாவினுடைய தாத்தா.
10. உயர்ந்த அமிர்தத்திற்கு ஒப்பான, ஆயிரம் யானை பலத்தை தரும் எட்டு ஜாடி ரசத்தை குடித்தான். எட்டு நாள் தூங்கி ரசத்தை ஜீரணித்து பத்தாயிரம் யானை பலத்தை பெற்றான்.

# படித்ததில் பிடித்தது

**செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு**

## Now, a Diwali-themed train for Singaporeans!

Oct 17, 2016
Times of India




தீபாவளி நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், சிங்கப்பூரின் Land Transport Authority தீபாவளியை அடிப்படையாகக் கொண்ட விசேஷ ரயிலை தொடங்கி விழாக்கால கொண்டாட்டங்களில் பங்குகொண்டுள்ளது. சிங்கப்பூரின் போக்குவரத்து மந்திரி கா பூன் வான் அவர்களால், ரயில், ஞாயிறன்று தொடங்கப்பட்டது என்று போக்குவரத்து அதிகாரம் தன்னுடைய ஃபேஸ்புக் பக்கத்தில் கூறியது. சிங்கப்பூரின் லிட்டில் இந்தியா ஸ்டேஷனில் இரண்டு தளங்கள் (platforms) போல, மனம் கவரும் வண்ணம் பூ வடிவமைப்புகள் மற்றும் ரங்கோலிகளுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ரயில், LTAவினால் லிட்டில் இந்தியா கடைக்காரர்கள் மற்றும் பாரம்பரிய சங்கத்துடன் (LISHA) இணைந்து துவங்கப்பட்டது.

## Instead Of Punishing Kids, A School In Baltimore Replaced Detention With Meditation

Sep 25, 2016
www.indiatimes.com

மாணவர்களை முதல்வரின் அலுவலகத்திற்கு அனுப்பவோ அல்லது பள்ளி அறையை விட்டு நீக்குவதற்கு பதிலாக, ராபர்ட் W கோல்மன் எலிமென்டரி பள்ளி, தியான வகுப்புகளை அறிமுகப் படுத்தியது. இந்த முயற்சி உண்மையில் குழந்தைகளிடம் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எந்த ஒரு மாணவராவது தவறான நடவடிக்கையில் ஈடுபட்டால், அவனோ அல்லது அவளோ "Mindful Moment Room" (கவனம் கொள்ள வேண்டிய தருணத்திற்கான அறை) - அனுப்பப்பட்டார்கள்.
மாணவர்கள் தங்களுடைய தவறுகளைப் பற்றி சிந்திக்கவும், தங்களை சாந்தப்படுத்திக்கொள்ளவும் உதவும் வகையில் தியானத்திலோ அல்லது சுவாச பயிற்சிகளிலோ ஈடுபடுத்தப்படுகிறார்கள். தவறான உணர்வுகளை கட்டுப்படுத்த இது உதவுகின்றது.

# Fourteen years forever: The Chitrakoot Ramleela is the world's earliest known Ramleela

Oct 11, 2016
Indian Express





வாரணாஸியில் சித்ரகூட மைதானத்தில்தான், முதன்முதலில் ராம்லீலா, 475 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தது என்று நம்பப்படுகிறது. சந்த் துளஸிதாஸர் வாரணாஸியில் அஸ்ஸி காட்டில் (ghat) படித்துறையில் சிந்தனையில் மூழ்கியிருந்தபொழுது அவருக்கு ராமர், சீதை மற்றும் லக்ஷ்மணரின் தரிசனம் ஏற்பட்டது. எனவே, நவீன ராம்லீலா வெளிப்படுவதற்கான முதல் முயற்சிகளின் பிறப்பிடமாக வாரணாஸி திகழ்ந்தது. சித்ரகூட ராம்லீலா, சரித்திர கிளர்ச்சிகள் அல்லது உள்ளூர் கலவரங்களுக்காகவோ நிற்கவில்லை. வ்யோமேஷ் ஷுக்லா என்ற கவிஞர், "கங்கை நதி வழிந்தோடி மைதானங்களில் வெள்ளம் வந்தாலும், "ராமாயணிகள்", ராம்சரிதமானஸை ஒரு கச்சேரியின்போது வாசிக்கும் அந்தக் காவியத்தின் ப்ராம்மண நிபுணர்கள், முழங்கால் அளவு சேறில் நின்றுகொண்டு எப்பொழுதும் போல தொடர்ந்திருக்கிறார்கள்" என்று கூறுகிறார். முதல் ராம்லீலா, சந்த் துளஸிதாஸரின் சிஷ்யரான மேகா பட்டினால் ஆரம்பிக்கப்பட்டது. ஜங்கி பாணியின் செயலாக்கத்தைப் பின்பற்றி, இதில் ஒவ்வொரு அத்தியாயமும் சில நிமிடங்கள் கொண்டன. "ராம்லீலா பொழுதுபோக்காக மட்டும் இல்லாமல் போதிக்கவும் செய்கிறது. நாங்கள் எங்களிடம் வந்தடைந்துள்ள பாரம்பரியத்தை கடைசி விவரம் வரை அப்படியே பின்பற்றுகிறோம்" என்று அமைப்பாளர் கூறுகிறார். சித்ரகூட ராம்லீலா, அடையாளபூர்வமாக நாட்டின் மற்றொரு உயரிய மதத்திற்கும் இடமளிக்கிறது. ஒரு முஸ்லீம் அன்பர், அமைப்பை சுற்றி தினமும் ஏற்றப்படும் வானவேடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ளார். மற்றொரு முஸ்லீம் அன்பர், அமைப்பின் வரவை அறிவிக்க ஊர்வலத்தின் முன்னனியில் ட்ரம்ஸ் (மேளம்) வாசிக்கிறார். சித்ரகூட ராம்லீலா, கடந்தகாலம், நிகழ்காலத்திடம் பலமாக பேசுகிறது என்ற நம்பிக்கையில் தீவிரமாகவும், மாற்றத்தை பிடிவாதமாக எதிர்த்துக்கொண்டும் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 10 November 2016 | கொடுங்கையூரில் ஸத்ஸங்கம் |
| 11 November 2016 | ஏகாதசி |
| 13 November 2016 | கடலூரில் ஸத்ஸங்கம் |
| 25 November 2016 | ஏகாதசி |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:
helpdesk@madhuramurali.org
Ph: "24895875"
SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி


Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org



- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


மதுரமுரளி



காஞ்சி சங்கர மடம் VRNT வேத பரீக்ஷயில்
தேர்ச்சிபெற்ற ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் வித்யார்த்திகளுடன்

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar